7. அமைச்சரின் அறிக்கை.

நடைபெற்று முடிந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம் குறித்து அவை நிதியமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடைபெற்று முடிந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி அரசின் கருத்தை இந்த அவைக்குத் தெரிவிக்கும் முறையில் இந்த அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன்.

கடந்த மூன்றுந் தேதி முதல், முறையான அறிவிப்பின்றி திடீரென மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தை, சட்டப் பேரவையில் 11—3—78-ல் நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க (முதல் அமைச்சர் அவர்கள் சார்பாகப் படிக்கிறேன்) நிபந்தனைகள் ஏதும் விதிக்காமல் 14-ந் தேதி இரவு திரும்பப் பெற்றுக் கொண்டு 15-ந் தேதி முதல் அரசிதழ் பதிவுபெறுத அலுவலர்கள் பணிகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் அரசின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தக் காலங்களில் தங்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெற வேண்டிய பணிகள் நடைபெறாமல் குறிப்பாக, உயிரைப் பாதுகாக்கும் மருத்துவமனைகளில் நோய் தீர்க்கும் அத்தியாவசியப் பணிகள்கூட நடைபெறாமலும் சுகாதாரத்தைப் பாதுகாக்க நாள்தோறும் நடைபெற வேண்டிய துப்புரவுப் பணிகள்கூட நடைபெறாமலும் நீதிமன்றங்களுக்குச் சென்று அவசரமான பரிகாரம் பெற முடியாமல் தடுக்கப்பட்ட நிலையிலும் சங்கடங்களையும் கஷ்டங்களையும் இழப்புகளையும்கூட ஏற்றுக் கொண்டு, அனுதாபத்தோடு அரசுக்கு ஆதரவளித்த பொது மக்களுக்கு அரசின் நன்றியுணர்வை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், வேலை நிறுத்தம் நடைபெற்றபோது பொது மக்களுக்கு இயன்ற அளவாவது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வோடு பணியாற்றிய, செஞ்சிலுவைச் சங்கம்,

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 16

கில்ட் ஆப் சர்வீஸ், விவேகானந்தர் கல்லூரி மாணவர்கள், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவிகள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், ஒய்.எம்.சி.ஏ. சிறுவர்கள் சங்கம், கோவை சிறைச் சாலைக் கைதிகள், மற்றும் மாவட்டங்களில் ஆங்காங்கு வந்து உதவிய பல நிறுவனங்களுக்கும், அவைபோன்ற அத்தனை நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கட்கும், பணியாளர்கட்கும், அதிகாரிகட்கும், ஆதி ஆந்திர சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தன்னலமறுத்து உற்றுழி உதவிய பொறுப்புள்ள கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் எனது நன்றியை அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளுக்கு எல்லாம் மேலாக, நெஞ்சு நெகிழத்தக்க வகையில், சென்னை பொது மருத்துவ மனையிலும், மற்ற மருத்துவ மனையிலும் உயர்பட்டம் பெற்று பணியாற்றும் மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், அவுஸ் சர்ஜன்கள் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று எண்ணி சாதாரண, துப்புரவு—மலஜலம் எடுத்தல் போன்ற பணிகட்கு தங்களை ஆட்படுத்திக் கொண்டார்கள். தியாக உணர்வு படைத்த, தொண்டுள்ளம் கொண்ட அந்த உத்தமர்களுக்கெல்லாம், துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகி, மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த நோயாளிகளின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் இந்த அரசின் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு தீவிரமாக வேலை நிறுத்தத்தை அடக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடாததால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் ஆவேச நடவடிக்கைகளை முடுக்கி விட்டார்கள். அதையும் இந்த அரசு அமைதியோடு தான் பார்த்தது. இப்படி எல்லாச் சூழ்நிலைகளையும் உணர்ந்து அரசு இரண்டு காரணங்களினால், இந்த அணுகு முறையைக் கையாண்டது.

ஒன்று, இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களினால் பொதுமக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்—நாட்டு நலன் எவ்வாறு முடக்கப்படுகிறது என்பதைப் பொது மக்களும்—ஆத்திரம் அடங்கிய பிறகு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது.

இரண்டாவது—இதுபோன்ற கிளர்ச்சிகள்—நியாயமான கிளர்ச்சியா நியாயமற்ற கிளர்ச்சியா என்று தீர்மானிக்கு முன்பு—மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டிய கிளர்ச்சியா, அல்லவா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். அதற்கும் பிறகுதான் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற அமரர் பேரறிஞர் அண்ணா வழிகாட்டுதலின்படி அணுக வேண்டும் என்பது.

இந்த இரண்டு அடிப்படைகள்தான், இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பொறுத்தவரை அரசின் அணுகுமுறைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

எனவே, எப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் பொது மக்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், நல்லுணர்வோடும் உறவோடும் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது, நாம் எல்லோரும் மன நிறைவு அடைய வேண்டிய நிகழ்ச்சியாகும்.

அரசு அலுவலர்கள் பல்வேறு வேண்டுகோள் வைத்தார்கள். அவைகளில் எந்த எந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட இயலும் என்பதை இந்த அவையில் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுவிட்டதற்குப் பிறகு மனம் விட்டு விவாதிக்கலாம் என்று அரசு முடிவெடுத்து அறிவித்தது. அதையொட்டி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு விட்டது.

கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட அனைவரையும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட இருவரைத் தவிர, விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் எவர் எவர் பதவியில் மீண்டும் வந்து சேர்ந்தனரோ அவர்களுடைய தற்காலிகப் பணி நீக்கம் அவர்களுக்கு உரிய விடுப்புகளாகக் கருதப்படும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. தற்காலிக அரசு ஊழியர்களில் கிளர்ச்சியின் போது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் 10 (a) (1) விதியின்படி தற்காலிகப் பணி புரிபவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டியதில்லை என்ற அரசு ஆணையும், வேலை நிறுத்தம் கைவிடப்பட்ட உடனேயே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமுதாய விரோதமான வன்முறைச் செயல்களைப் பொறுத்தவரை சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் வேலை நிறுத்தம் காரணமாக யார் மீதும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஏற்பட்டிருக்கும் நல்லுணர்வு தொடர்ந்து நீடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு மனப்பூர்வமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.